மாணவர்களுக்கான விடுமுறைக் காலப் பரீட்சை வினாத்தாள்

.தமிழ் இலக்கிய நயம்

முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்

தரம் 10

✍ (பகுதி I இல் 1ம், 2ம் வினாக்களுக்கும் பகுதி II இல் 3 ம் வினாவிற்கும் பகுதி III இல் 5,6,7,8 ஆகிய வினாக்களுள் விரும்பிய இரண்டு வினாக்களுமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக)

பகுதி - I

01. சுருக்கமான விடை எழுதுக

1. இனித்த புவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்
இசை கேட்டேன் மணம் மோந்தேன்..

அ. இக் கவிதை ஆசிரியரின் பெயர் யாது?

ஆ. அவ் ஆசிரியரின் படைப்புக்கள் இரண்டு தருக?

2. ஆறலை கள்வர் படை அருளின் மாறுதலை
பெயர்க்கும் மருவின் பாலை..

அ. இவ்வடிகள் பயின்று வந்துள்ள நூல் எது?

ஆ. மேற்படி நூலின் ஆசிரியர் யார்?

3.குவளை உண்கண் குய்ப் புகை கமழ..

அ. இவ்வடிகள் இடம்பெறும் நூல் எது?

ஆ. கமழ என்பதன் கருத்து யாது?

4.குஞ்சியாச்சி வாழ, குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ..

அ. குஞ்சியாச்சி

ஆ. குஞ்சியப்பு

ஆகியவற்றிற்கு வழங்கப்படும் உறவு முறைப் பெயர்கள் எவை?

5. என் வாயில் என்ன தெரிகிறது பார் என்றார்..

அ. இக்கூற்றினை கூறியவர் யார்?

ஆ. அவர் கூறிய அறிவுரை யாது?

(5 × 4 = 20 புள்ளிகள்)

www.lkedu.lk

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

02. கீழ்காணும் பாடற் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா இதில்
அங்கமெல்லாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்பு மிகக் கலந்ததையா

கொட்டிய உப்பு கசப்பென்றாலும் உள்
கூடியினிக்குதையா இது
வீட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட
வின்னின் அமுதையா

சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா இது
சின்னஞ் சிறுகுழந்தை அளைந்தது
தெய்வ அமுதமையா

ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு
ஓடி வருகையிலே இது
பாதி வழி வந்து தாமரைக் கை தந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினில் சுற்றிய
கட்டுப் பொதி இதையா இதைக்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாம் ஒரு
சோதி மிளிருதையா

அ. மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கின்றான்?

ஆ.கணவன் மனைவிக்கிடையே இழையோடும் இல்லறப் பண்புகளை தெளிவுறுத்துக?

இ. <u>பாதி வழி வந்து தாமரைக் கை தந்த..</u> எனும் தொடரில் புயின்றுள்ள அணியை இனங்கண்டு விளக்குக?

ஈ. <u>விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட வின்னின் அமுதையா..</u>
எனும் தொடரில் புலப்படும் இலக்கியச் சிறப்பினை விளக்குக?

உ. மனைவியின் சமையல் தாமதமாகி விட்டது என்பதை நீர் உணர்கின்றீரா?
அதனை புலப்படுத்தும் தொடரை எடுத்துக்காட்டுக?

(5 × 5 = 25 புள்ளிகள்)

பகுதி - II

03. கீழ்காணும் உரைப் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

வலிமையான ரவுடிகள் சீக்கிரம் செத்துப் போகிறார்கள். மென்மையானவர்கள் நீண்ட நாள் உயிர் வாழ்கின்றார்கள். வாளை உருவியவன் வாளாலேயே சாவான் என்கின்றது பைபிள். வலிமையே வாழும் என்று நினைக்கின்றோம். ஆனால் ஆங்கிலேயரின் வலிமையான படையை காந்தியழகளாரின் அகிம்சை வென்றதை வரலாறு காட்டுகின்றது. கொடியவர்களையும் இசை மென்மையானவர்களாக்கி விடுகின்றது. பாலைப்பண் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி கீழே போட்டு விடச் செய்யும் என்கின்றார் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார். வன்மையின் வெற்றி அற்பமானது, மென்மையின் வெற்றி நுட்பமானது. ஆண் வன்மையானவன். பெண் மென்மையானவள் . இருவரும் மற்போர் புரிந்தால் ஆண் வெற்றி பெற்று விடுவான். பெண் ஆணை அன்பால் வென்று விடுவான். போர்க்களத்தில் மாவீரர்களையும் வென்ற வீரன் பாவையின் பார்வை அம்பு பட்டால் தோற்றுப் போய் அவள் காலடியில் விழுந்து விடுகின்றான். போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே, ஓ என அலறும் ஒரு போர் வீரனை காமத்துப் பாலில் காட்டுகின்றார் திருவள்ளுவர்.

www.ikeou.lk

அ. உரைப்பகுதியில் புலப்படும் நூல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக?

ஆ. காந்தியடிகளின் அகிம்சை எதனை வென்றதாக பத்தியாசிரியர் கூறுகின்றார்?

இ. பாலைப் பண்ணின் இயல்பு குறித்து யாது கூறப்படுகின்றது?

ஈ. வன்மை, மற்றும் மென்மை பற்றிய சித்தரிப்பினை எடுத்துக்காட்டுக?

உ. பாலையின் **பார்வை அம்பு, பெண்ணின் வதன வளப்பு** எனும் தொடர்களின் இலக்கியச் சிறப்பினை விளக்குக?

(5 × 5 = 25 புள்ளிகள்)

பகுதி - III

பின்வரும் வினாக்களில் எவையேனும் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

O4. புத்தசாலை பாடற் பகுதியில்,

அ. கவிஞர் காண விரும்பும் புத்தகசாலை

ஆ. புத்தகசாலை எங்கும் வேண்டும் எனக் கூறுவதற்கான காரணங்கள்

என்பன குறித்து விபரிக்குக.

O5. மரம் என்பது உயர்திணை எனும் பத்தி எழுத்தில்

அ. மனிதனின் வாழ்க்கையில் மரத்தின் பங்கு

ஆ. மரம் என்பது உயர்திணை என்பதற்கு பத்தியாசிரியர் கூறும் காரணங்கள்

என்பவற்றை தெளிவுறுத்துக

O6. மருத்துவிச்சி வாழ்த்து பாடலில்,

அ. மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு

ஆ. கிராமியப் பண்பாட்டம்சங்கள்

என்பன புலப்படுமாற்றினை கருத்துரைக்க.

O7. முளிதயிர் பிசைந்த.. எனும் பாடற் பகுதியில்,

அ. தலைவன் மீது தலைவி கொண்ட அன்பு

ஆ. தலைவியின் சமையல் ஊடாக வெளிப்படும் இல்லறப்பண்புகள்

ஆகியவற்றை விபரிக்குக.

(15 × 2 = 30 புள்ளிகள்)

வினாத்தாள் தொகுப்பு
இரா. நிஷாந்தன்
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
கிளிநொச்சி கல்வி வலயம்

www.ikedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள், செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில் இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu